<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 1/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | Addl.W.1. L.W. P.W.3 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோபால் | தொழில் | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | |
| கிராமம் | : | இனம் | |
| தாலூக்கா | : | வயது | |
| Mail ID | : | Mobile No. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 05.03.2026.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.02.2024 ம் தேதி தலைமை காவலர் மாரிமுத்து நிலைய அலுவலில் இருந்த போது கௌசல்யா க/பெ. இளங்கோவன் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 144/2024 ச/பி 294(பி),323,427,452,506(2) இதச மற்றும் 4 of TNPHW Act வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் பங்காரு, சிந்து ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடமும் பார்வை மகசரும் தயார் செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். மாதிரி வரைபடம **அ.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகசர் **அ.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.
2. பின்னர் சம்பவ இடத்தில் வீட்டின் கதவு சேதம் அடைந்தது பார்த்து

ஸ்ரீ சிவராம் பிளைவுட்ஸ் கடையின் கார்பெண்டர் முருகானந்தம் என்பவரை அழைத்து வந்த சேதம் மதிப்பு கணக்கிடப்பட்டது. பின்னர் சாட்சிகள் கௌசல்யா, மங்கம்மாள், மலர் செல்வி, ஜெய்துான் பிவி சத்யா ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் வழக்கின் எதிரிகளை தேடி புலன் வைத்த போது எதிரிகள் இளங்கோவன், சுப்பிரமணி ஆகியோரை உடுமலை அரசு மருத்துவமனை முன்புறம் கைது செய்து திரேக பரிசோதனைக்கு பின் கனம் நீதி மற்றொரு எதிரியான புஷ்பவதி என்பவரை விசாரித்து 41(a) குவிமுச மனுவின் பேரில் அறிவிப்பு அனுப்பி அறிவுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

3. பின்னர் வாதிக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் உமர் செரிப் என்பவரை விசாரித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் கார்பெண்டர் முருகானந்தம் கொடுத்த ரூ 3236/- சேதம் அடைந்துள்ளது என்ற சான்றினை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சேத மதிப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இந்நிலையில் உதவி ஆய்வாளர் பணி மாறுதல்ஆகிவிட்டதால் பின்னர் வந்த உதவி ஆய்வாளர் ராமேஷ்வரன் என்பவர் வழக்கு கோப்பினை தொடர் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு ஆய்வு செய்ததில் புதிய சங்கதிகள் எதுவும் கூறாததால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மாரிமுத்து என்பவரை விசாரத்து வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், சொன்ன தேதியில் எதிரிகள் சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் குற்றம் எதும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. தவறான புகாரினை பெற்று சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டு பொய் வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/-T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.